சட்டத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு

2023 - 2024

மானியக் கோரிக்கை எண். 33

எஸ். ரகுபதி

சட்டத் துறை அமைச்சர்

©

தமிழ்நாடு அரசு

2023

சட்டத்துறை

கொள்கை விளக்கக் குறிப்பு 2023–2024

மானியக் கோரிக்கை எண்.33

வரிசை எண்	பொருள்	பக்க எண்
1.	முன்னுரை	1–7
2.	சட்டக் கல்வி	8–25
3.	தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்	25–34
4.	தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகம்	34–42
5.	மாநில சட்ட ஆணையம்	42–47
6.	மாநில (சட்ட) ஆட்சிமொழி ஆணையம்	47–50
7.	சான்றுறுதி அலுவலர்கள்	50–51
8.	நீடித்த வளர்ச்சி இலக்குகள்	51–53

சட்டத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு 2023–2024

மானியக் கோரிக்கை எண். 33

முன்னுரை

சட்டம் என்பது நீதி நிருவாகத்தில் அரசால் அங்கீகரிக்கப்பட்டு பயன்படுத்தப்படும் கொள்கைகளின் தொகுப்பாகும் என சர் ஜான் சால்மண்ட் அவர்கள் வரையறுக்கிறார்.

மக்கள் நல அரசு மற்றும் மக்கள் நல சமுதாயம் ஆகியவற்றில் மனிதனின் ஒவ்வொரு அலுவலிலும் சட்டமானது மிக முக்கியமானதொரு பங்கினை ஆற்றுகிறது. மேலும், சமூக–பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு சட்டமானது முக்கியமானதொரு கருவியாகப் பயன்படுகிறது. இன்று சட்டம் என்பது சமூகக் கட்டுப்பாட்டிற்கான ஒரு கருவியாக மட்டுமே கருதப்படாமல் சமுதாய மாற்றத்திற்கான ஒரு கருவியாகவும் கருதப்படுகிறது.

அடிப்படை உரிமைகள், அரசின் கொள்கையினை நெறிப்படுத்தும் கோட்பாடுகள் ஆகியன அனைத்தும் அரசமைப்புத் திட்டத்தின் பகுதிகளாக இருப்பதுடன் சட்டத்தின் ஆட்சி என்பதன் அடிப்படையில் சுதந்திரமானதாகவும், நியாயமானதாகவும் உள்ள சமூக முறையமைவினை அமைப்பதற்கான நோக்கத்தைக் கொண்டிருக்கின்றன. மக்களாட்சி சமுதாயத்தின் வாழ்வில் சமூக, பொருளாதார, கலாச்சார மற்றும் அரசியல் சமத்துவம் பேணப்பட வேண்டும். மக்களின் பிரதிநிதிகளால் இயற்றப்படும் சட்டமானது அடிப்படை உரிமைகளை நிலைநிறுத்துவதாகவும் குடிமக்களுக்கு சட்டமுறையிலான பாதிப்பு ஏற்படாமல் தடுப்பதாகவும் இருத்தல் வேண்டும்.

சட்டம் என்பது தற்போதைய நடைமுறைக்கு ஏற்ற சட்டமாக இருத்தல் வேண்டும். மேலும், சட்டமானது அதனை இயற்றும் சட்டமன்றத்தின் சட்டமியற்று அதிகார வரம்பிற்குள் அமைவதாக

இருப்பது மட்டுமின்றி அது அடிப்படை உரிமைகள் ஏதொன்றுக்கும் முரணாக இல்லாத வகையிலும் இருத்தல் வேண்டும்.

சட்டமானது சட்டத்தை உருவாக்குவதில் உள்ள மரபு வழக்காறுகளைப் பின்பற்றுதல் வேண்டும். மேலும், அது நடத்தையைக் கட்டுப்படுத்துகிற விதியாகவும் இருத்தல் வேண்டும். நமது சமுதாயத்தை சிறந்த வளர்ச்சியின் மூலமாக சீர்மிகு நாகரிகமாக மாற்றுவதற்கான ஒரு கருவியாக சட்டம் திகழ்கிறது.

இந்த அரசின் சட்டத்துறையானது, சமுதாய நலனிற்கான அரசின் கொள்கைகளைச் செயற்படுத்துவதற்காக மேற்சொன்ன கொள்கைகளை கவனத்திற்கொண்டு பல்வேறு சட்டங்களை இயற்றுகிறது.

தமிழ்நாடு அரசின் ஆலோசனைத் துறைகளில் சட்டத்துறையும் ஒன்றாகும். மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களின்

அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றவும், அதற்கான அவசியம் எழும் போதெல்லாம், உகந்த சட்டங்களை இயற்றுவதிலும் சட்டத்துறை முக்கிய பங்கு வகிக்கிறது. மக்களிடையே சமூக நீதி, சுதந்திரம் மற்றும் சமத்துவத்தை உறுதிப்படுத்த புதுமையான சட்டங்களை இயற்றுவதிலும் இத்துறை இன்றியமையாதது. நமது தெய்வப்புலவர் திருவள்ளுவர் பின்வரும் திருக்குறளில் நிரந்தரமாக அரசாள்பவரது பண்புகளை வகுத்துள்ளார்.

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு."

–குறள் 383

காலந்தாழ்த்தாத விரைவான நடவடிக்கைகளும், அறிவுடைமையும், துணிவும் நாடாளுகின்றவர்களுக்குத் தேவையானவையும், நீங்காமல் நிலைத்திருக்க வேண்டியவையுமான பண்புகளாகும் என்பதை மேற்கண்ட குறள் குறிப்பிடுகிறது.

மேற்கூறிய பண்புகளை சிரமேற்கொண்டு, சட்டத்துறையானது நமது அரசமைப்பின் உயரிய இலட்சியங்களை நிறைவேற்றும் வகையில் பொருத்தமான சட்டங்களை இயற்ற அயராது உழைப்பதன் வாயிலாக, நமது மாநிலத்தில் சமூக நீதி, மதச்சார்பின்மை, சமத்துவம், அமைதி மற்றும் நல்லிணக்கத்தை உறுதி செய்ய உதவுகிறது.

அரசின் கொள்கைகளை நிறைவேற்றுவதற்காக சட்டங்கள் தேவைப்படும்போது, சட்டத்துறை, தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து அக்கொள்கைகளுக்கு சட்டவடிவமளித்து சட்ட முன்வடிவுகளை உருவாக்குகிறது.

சட்டமன்றப் பேரவை, சட்ட வரைவிற்கு ஒப்புதல் அளித்த பின்னர், ஆளுநரின் மற்றும்/அல்லது குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்ற பின்னர், அது சட்டமாகும் வரையில் சட்டத்துறையின் பணி தொடர்கிறது. சட்டமன்றப் பேரவை ஒத்தி

வைக்கப்பட்டு, அமர்வில் இல்லாத காலங்களிலும் அரசமைப்புச் சட்டத்தின் 213–ஆவது உறுப்பின் படி அவசரச் சட்டம் வாயிலாக சட்டங்களை அவசரத் தேவைக்கேற்ப சட்டத்துறை உருவாக்குகிறது. சட்டத்துறையின் பணி அவசரச் சட்டத்திற்கான முன் வரைவுகளை அதன் நோக்கத்திற்கேற்ப தயாரித்து ஆளுநரால் அது பிரகடனப்படுத்தப்படும் வரையில் தொடர்கிறது.

மேலும், சட்டமன்றப் பேரவைச் செயலகம் உட்பட, தலைமைச் செயலகத்தில் இயங்கும் அனைத்துத் துறைகளுக்கும் சட்ட விவகாரங்கள் தொடர்பாக ஆலோசனை வழங்குவதும் சட்டத்துறையின் முக்கிய பணியாகும்.

இவை தவிர, சட்ட விதிகள், அறிவிக்கைகள், ஆணைகள் மற்றும் மாநில அரசு ஒரு தரப்பினராக இருக்கிற ஆவணங்கள் ஆகியவற்றையும் அவற்றின்

சட்டவகைமுறைகள் தொடர்பாகவும் சட்டத்துறை கூர்ந்தாய்வு செய்து அறுதி செய்கிறது.

மாநில அரசு தரப்பினராக உள்ள அனைத்து வழக்குகளில், உறுதிமொழி ஆவணங்களின் வரைவும், எதிர் உறுதிமொழி ஆவணங்களின் வரைவும், அவற்றிற்கான வரைவு மறுமொழிகளும் சட்டத்துறையில் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு அறுதி செய்யப்படுகின்றன.

மேலும், பின்வருவன தொடர்பான நிருவாகப் பணிகளையும் சட்டத்துறை செய்து வருகிறது:–

1. சட்டக்கல்வி.
2. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்.
3. தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.
4. மாநில சட்ட ஆணையம்.
5. மாநில சட்ட (ஆட்சிமொழி) ஆணையம்.
6. சான்றுறுதி அலுவலர்கள்.

சட்டக் கல்வி

சட்டக்கல்வித் துறையானது, தமிழ்நாட்டில், 1953–ஆம் ஆண்டு சட்டக் கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டு தொடர்ந்து பணியாற்றி வருகிறது. இத்துறை உருவாக்கப்பட்டதிலிருந்து, தமிழ்நாட்டில் சட்டக் கல்வியின் தரம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளதோடு, மென்மேலும் முன்னேற்றமடைய, சட்டக்கல்வி இயக்குநரகம் தொடர்ந்து முயன்று வருகிறது.

சென்னை, டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி 1891–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மதுரையில் ஒரு சட்டக் கல்லூரி 1974–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மேலும், 1979–80–ஆம் கல்வியாண்டில் திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூரில் தலா ஒரு அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 1996–97–ஆம் கல்வியாண்டில் திருநெல்வேலியில்

ஒரு அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டது. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தால் செங்கல்பட்டில் நடத்தப்பட்டு வந்த சட்டக் கல்லூரி, அரசு சட்டக் கல்லூரியாக டிசம்பர், 2006–இல் அறிவிக்கப்பட்டது. மேலும், 2008–2009–ஆம் கல்வியாண்டில், வேலூரில் ஒரு அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, 2017–2018–ஆம் கல்வியாண்டில் விழுப்புரம், தருமபுரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் அரசு சட்டக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன.

நீதியரசர் திரு.ப.சண்முகம் விசாரணை ஆணையத்தின் பரிந்துரைக்கேற்ப, சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, சென்னை உயர்நீதிமன்ற வளாகத்திலிருந்து, செங்கல்பட்டு மாவட்டம், புதுப்பாக்கம் மற்றும் திருவள்ளூர் மாவட்டம், பட்டறைப்பெரும்புதூர் ஆகிய இடங்களில் புதிதாக கட்டப்பட்டுள்ள வளாகங்களுக்கு இடமாற்றம்

செய்யப்பட்டது. செங்கல்பட்டு மாவட்டம், புதுப்பாக்கத்தில் கட்டப்பட்டுள்ள சட்டக்கல்லூரி வளாகத்தில் 5 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பு மற்றும் முதுநிலை சட்டப்படிப்புகளும், திருவள்ளூர் மாவட்டம், பட்டறைப் பெரும்புதூரில் கட்டப்பட்டுள்ள சட்டக்கல்லூரி வளாகத்தில் 3 ஆண்டு இளநிலை சட்டப்படிப்பு மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகளும் 2018–2019–ஆம் ஆண்டு முதல் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. மேலும், 2019–2020–ஆம் கல்வியாண்டில் சேலம், நாமக்கல் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் அரசு சட்டக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. மேலும், சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டு 2022–2023–ஆம் கல்வியாண்டு முதல் செயல்பட்டு வருகிறது. தற்போது, இம்மாநிலத்தில் பதினைந்து அரசு சட்டக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன.

2022–2023–ஆம் கல்வியாண்டில் அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளில் ஒப்பளிக்கப்பட்ட மொத்த இடங்களின் எண்ணிக்கை 13,986. இவற்றில், கல்லூரி வாரியாக ஒப்பளிக்கப்பட்ட மொத்த இடங்களின் எண்ணிக்கை கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது:–

அட்டவணை

வ. எண்	**சட்டக் கல்லூரியின் பெயர்**	**மொத்த ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை**
1.	சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக்கல்லூரி, பட்டறைப்பெரும்புதூர். (மூன்றாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப்படிப்புகள்)	1123
2.	சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக்கல்லூரி, புதுப்பாக்கம். (ஐந்தாண்டு இளநிலை சட்டப்படிப்பு	1265

	மற்றும் முதுநிலை சட்டப்படிப்புகள்)	
3.	அரசு சட்டக் கல்லூரி, மதுரை. (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்)	1478
4.	அரசு சட்டக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி. (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்)	1480
5.	அரசு சட்டக் கல்லூரி, கோயம்புத்தூர். (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்)	1480
6.	அரசு சட்டக் கல்லூரி, திருநெல்வேலி. (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்)	1460

7.	அரசு சட்டக் கல்லூரி, செங்கல்பட்டு. (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்)	1100
8.	அரசு சட்டக் கல்லூரி, வேலூர். (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப்படிப்புகள்)	680
9.	அரசு சட்டக் கல்லூரி, விழுப்புரம். (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப்படிப்புகள்)	720
10.	அரசு சட்டக் கல்லூரி, தருமபுரி. (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப்படிப்புகள்)	680

11.	அரசு சட்டக் கல்லூரி, இராமநாதபுரம். (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை மற்றும் முதுநிலை சட்டப்படிப்புகள்)	680
12.	அரசு சட்டக் கல்லூரி, சேலம். (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை சட்டப் படிப்புகள்)	560
13.	அரசு சட்டக் கல்லூரி, நாமக்கல். (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை சட்டப் படிப்புகள்)	560
14.	அரசு சட்டக் கல்லூரி, தேனி. (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை சட்டப் படிப்புகள்)	560
15.	அரசு சட்டக் கல்லூரி , காரைக்குடி (மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு இளநிலை சட்டப் படிப்புகள்)	160
மொத்தம்		**13986**

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இராமநாதபுரம், சேலம், நாமக்கல் மற்றும் காரைக்குடி ஆகிய அரசு சட்டக் கல்லூரிகளை தவிர்த்து, ஏனைய அரசு சட்டக் கல்லூரிகள் அனைத்தும் சொந்த கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. இராமநாதபுரம் அரசு சட்டக் கல்லூரிக்கென சொந்தக் கட்டடம் கட்டும் பணிகளை மேற்கொள்ள ரூ.76.60 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு கட்டுமானப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. சேலம் அரசு சட்டக் கல்லூரிக்கென மாணவ, மாணவியர் விடுதிகளுடன் கூடிய சொந்தக் கட்டடம் கட்டும் பணிக்காக ரூ.101.55 கோடி மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டு கட்டுமானப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. நாமக்கல் அரசு சட்டக் கல்லூரிக்கென மாணவ, மாணவியர் விடுதிகளுடன் கூடிய சொந்த கட்டடம் கட்டுவதற்காக ரூ.92.31 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

காரைக்குடி அரசு சட்டக் கல்லூரிக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு பொதுப்பணித்துறையின் திட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் நிதி ஒப்பளிப்பு செய்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. காரைக்குடி அரசு சட்ட கல்லூரிக்கு தொடரும் மற்றும் தொடராச் செலவினமாக ரூ.92.01 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு செய்தும், ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியிடங்களை தோற்றுவித்தும் ஆணையிடப்பட்டுள்ளது.

பெரும்பாலான அரசு சட்டக் கல்லூரிகளில் மாணவ, மாணவியர் விடுதி வசதிகள் உள்ளன. திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, செங்கல்பட்டு மற்றும் வேலூரில் உள்ள அரசு சட்டக் கல்லூரிகளில் மாணவியர் விடுதி மட்டும் உள்ளது. மேற்சொன்ன நான்கு கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு விடுதிக் கட்டடம் கட்டுவதற்கென உரிய நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாநிலத்தில் உள்ள அரசு சட்டக் கல்லூரிகளுக்கு 186 உதவிப் பேராசிரியர்களை தேர்வு செய்திட ஆசிரியர் தேர்வு வாரியத்திடம் கோரப்பட்டுள்ளது.

ஆசிரியர் தேர்வுவாரியத்தால் தெரிவு செய்யப்பட்டு 111 உதவிப் பேராசிரியர்கள் அரசு சட்டக் கல்லூரிகளில் 2019, 2020, 2021 மற்றும் 2023-ஆம் ஆண்டுகளில் பணி நியமனம் செய்யப்பட்டனர். மீதமுள்ள பணியிடங்களை நிரப்ப உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, புதுப்பாக்கம், செங்கல்பட்டு அரசு சட்டக்கல்லூரி மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரி ஆகியவற்றில் கூடுதலாக முதுநிலை (எல்.எல்.எம்) சட்டப் படிப்புகள் 2022-2023-ஆம் கல்வியாண்டு முதல் தொடங்கப்பட்டுள்ளன. 2021-2022-ஆம் கல்வியாண்டு முதல் அரசு சட்டக்

கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் முதுநிலை சட்டப் படிப்புகளுக்கான (எல்.எல்.எம்) மாணவர் சேர்க்கை இணைய வழியில் (Online) நடத்தப்பட்டு வருகிறது.

தற்போது 11 அரசு சட்டக் கல்லூரிகளில் 40 மாணாக்கர் எண்ணிக்கையுடன் கூடிய பாடப்பிரிவுகளாக பல்வேறு பாடப்பிரிவுகளின்கீழ் முதுநிலை சட்டப்படிப்புகள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

<u>அரசு சட்டக் கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் முதுநிலை சட்டப் படிப்புகள் (2022–2023)</u>

வ. எண்	கல்லூரியின் பெயர்	எல்எல்.எம்., பாடப்பிரிவு
1.	சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, பட்டறைப் பெரும்புதூர்.	(1) வணிகச் சட்டம். (2) குற்றவியல் சட்டம் மற்றும் குற்றவியல் நீதிநிருவாகம். (3) சொத்துரிமைச்சட்டம். (4) தொழிலாளர் சட்டம் மற்றும் நிருவாகச்சட்டம்.

2.	சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, புதுப்பாக்கம்.	(1)சுற்றுச்சூழல், ஆற்றல் மற்றும் காலநிலை மாற்றச் சட்டங்கள். (2) குடும்பச் சட்டங்கள்.
3.	அரசு சட்டக் கல்லூரி, மதுரை.	(1) சொத்துரிமைச் சட்டம். (2) சர்வதேச சட்டம் மற்றும் நீதி.
4.	அரசு சட்டக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.	(1) தொழிலாளர் சட்டம் மற்றும் நிருவாகச் சட்டம். (2) அறிவுசார் சொத்துரிமைச் சட்டங்கள்.
5.	அரசு சட்டக் கல்லூரி, கோயம்புத்தூர்.	(1) வணிகச் சட்டம். (2) வரிச் சட்டங்கள்.
6.	அரசு சட்டக் கல்லூரி, திருநெல்வேலி.	(1)அரசியலமைப்புச் சட்டம் மற்றும் மனித உரிமைகள். (2) வணிகச் சட்டம்

7.	அரசு சட்டக் கல்லூரி, செங்கல்பட்டு.	(1)குற்றவியல் சட்டம் மற்றும் இணையக் குற்றம். (2) அறிவுசார் சொத்துரிமை சட்டம்
8.	அரசு சட்டக் கல்லூரி, வேலூர்.	அரசியலமைப்புச் சட்டம் மற்றும் நிருவாகச் சட்டம்.
9.	அரசு சட்டக் கல்லூரி, விழுப்புரம்.	(1) தகவல் தொழில் நுட்பம் மற்றும் இணைய பாதுகாப்பு சட்டங்கள். (2) குடும்பச் சட்டங்கள்.
10.	அரசு சட்டக் கல்லூரி, தருமபுரி.	பெரு நிறுவன நிருவாகச் சட்டங்கள் மற்றும் நிதி.
11.	அரசு சட்டக் கல்லூரி, இராமநாதபுரம்.	அரசியலமைப்புச் சட்டம் மற்றும் நிருவாகச் சட்டம்.

அரசு சட்டக் கல்லூரிகளில் இளநிலை சட்டப்படிப்பு பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை வழங்கப்பட்டு வருகிறது.

2022–2023–ஆம் கல்வியாண்டுக்கான சர்வதேச அளவிலான மாதிரி நீதிமன்ற போட்டிகளில் கலந்து கொள்ளும், மாணவர்களை தெரிவு செய்திட மொத்தமுள்ள 14 அரசு சட்டக் கல்லூரிகளிலும் மாதிரி நீதிமன்றப் போட்டிகள் நடத்துவதற்கென ரூ.70 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக்கல்லூரி, பட்டறைப்பெரும்புதூர், சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக்கல்லூரி, புதுப்பாக்கம் மற்றும் மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் செங்கல்பட்டு ஆகிய இடங்களில் உள்ள 7 அரசு சட்டக் கல்லூரிகளிலும் தமிழ் வழியில் சட்டப்படிப்பு பயிற்றுவிக்கப்படுகிறது. தமிழ் மொழி வாயிலாக சட்டப்படிப்புகள் பயிலும் மாணவர்களுக்கு ஆண்டுதோறும் தலா ரூ.400/– வீதம் ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

அரசு சட்டக் கல்லூரி நூலகங்களில் மாணவர்களது பயன்பாட்டிற்கென சட்டப் புத்தகங்கள், சட்ட இதழ்கள் மற்றும் சட்டத் தரவு தளங்கள் ஆகியவைகளை கொள்முதல் செய்யும் பொருட்டு, சிறப்பு நேர்வாக 2022–2023 மற்றும் 2023–2024–ஆம் கல்வியாண்டிற்கென ரூ.3 கோடிக்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, அதில் 2022–2023–ஆம் கல்வியாண்டுக்கென புதிதாக தொடங்கப்பட்ட காரைக்குடி அரசு சட்டக்கல்லூரி உட்பட 15 அரசு சட்டக்கல்லூரிகளுக்கு ரூ.1 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. அரசு சட்டக் கல்லூரிகளில் பணிபுரியும் உதவிப் பேராசிரியர்களுக்கான, ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் புத்தாக்கப் பயிற்சி ஆகியவற்றை நடத்திட ரூ.14 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன நிதியில், உதவிப் பேராசிரியர்களுக்கான புத்தாக்கப் பயிற்சியினை நடத்திட தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு

ரூ.7 இலட்சமும், ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டத்தினை நடத்திட சட்டக்கல்வி இயக்ககத்துக்கு ரூ.7 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களது மென்திறன்களை மேம்படுத்த தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகம் மூலம் ஆங்கிலத் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, செங்கல்பட்டு மற்றும் வேலூர் அரசு சட்டக் கல்லூரிகளில் உள்ளரங்கு விளையாட்டுத்திடல் மற்றும் உடற்பயிற்சிக் கூடம் நிறுவுவதற்கு ரூ.28 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

வேலூர் மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிகளுக்கு நூலக கட்டடம் கட்டும் பணிக்காக ரூ.13.02 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளி, கோயமுத்தூர், திருநெல்வேலி, செங்கல்பட்டு மற்றும்

வேலூர் ஆகிய அரசு சட்டக் கல்லூரிகளில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் (RO System for purification of drinking water) நிறுவிடும் பொருட்டு ரூ. 25 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. பட்டறைப்பெரும்புதூர், சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் கால்பந்து மற்றும் மட்டைப்பந்து விளையாட்டுத் திடல் நிறுவுவதற்காக, ரூ.1.57 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள அரசு சட்டக் கல்லூரிகள் மற்றும் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப் பள்ளியில் 5 ஆண்டு ஒருங்கிணைந்த சட்டப் படிப்பு மற்றும் 3 ஆண்டு சட்டப் படிப்பு முடித்த 17 இளம் சட்டப் பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.20,000/ உதவித்தொகையுடன் தன்னார்வப் பயிற்சி திட்டம் சட்டத்துறையில் செயல்படுத்திட ஆணை

வெளியிடப்பட்டது. நடப்பு ஆண்டில் மொத்தம் 15 சட்டப்பட்டதாரிகளுக்கு தன்னார்வப் பயிற்சி வழங்கப்படுகிறது.

திருவள்ளூர், செங்கல்பட்டு, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய அரசு சட்டக்கல்லூரிகளில் மாணவர்களின் நலனுக்காக புத்தக வங்கித் திட்டம் தொடங்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்

சட்டக் கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதன் மூலமாக, சட்டம் பயிலும் மாணவர்கள் இன்றைய போட்டி நிறைந்த உலகில் வெற்றி பெற்று தனித்துவம் பெறுவதற்காக சட்டக் கல்விக்கென தமிழ்நாட்டில், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் மாநிலச் சட்டத்தின் மூலம் தோற்றுவிக்கப்பட்டது. மேலும், தெற்காசிய நாடுகளில் சட்டக் கல்விக்கென தோற்றுவிக்கப்பட்ட முதல் பல்கலைக்கழகமாக இது

திகழ்கின்றது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளையும் தன்னகத்தே ஒருங்கிணைத்து செயல்பட்டு வருவதால் சட்டக் கல்வியின் தரம் மேம்பட்டு வருகிறது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் தற்போது பெருங்குடி, கொட்டிவாக்கம் கிராமத்தில் தரமணி தொடர்வண்டி நிலையத்திற்கு மிக அருகில் 15 ஏக்கர் நிலத்தில், ரூ.61.74 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. மேலும், இப்பல்கலைக்கழக விரிவாக்கப் பணிகளுக்காக கூடுதலாக 10 ஏக்கர் நிலம் தமிழ்நாடு அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்பல்கலைக்கழகத்தின் பெருங்குடி வளாகத்தில் செயல்படும் சீர்மிகு சட்டப் பள்ளியில் இளநிலை சட்டப் படிப்பு மாணவர்களுக்கென ரூ.13 கோடியில் புதிய கூடுதல் கட்டடம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், சட்டக்கல்வி பயிற்றுவிக்கும் பணியை, சீர்மிகு சட்டப்பள்ளி வாயிலாக தொடங்கி, மூன்றாண்டு எல்.எல்.பி (ஹானர்ஸ்) சட்டப்படிப்பு மற்றும் ஐந்தாண்டு ஒருங்கிணைந்த பி.ஏ.,எல்.எல்.பி (ஹானர்ஸ்), பி.காம்.,எல்.எல்.பி (ஹானர்ஸ்), பி.பி.ஏ.,எல்.எல்.பி (ஹானர்ஸ்) மற்றும் பி.சி.ஏ.,எல்.எல்.பி (ஹானர்ஸ்) ஆகிய இளநிலை சட்டப்படிப்புகளில் மொத்தம் **3484** மாணவர்கள் பயின்று வருகின்றனர். இப்பல்கலைக்கழகம் முதுநிலை சட்டப்படிப்பு மற்றும் ஆராய்ச்சி செயல்பாடுகளையும் பயிற்றுவித்து வருகிறது.

தேசிய தர மதிப்பீட்டுக்குழு இப்பல்கலைக்கழகத்திற்கு B^{++} தரச்சான்றிதழினை வழங்கியுள்ளது. இப்பல்கலைக்கழகம் 25–வது ஆண்டை நிறைவு செய்து, 20.09.2022 அன்று தனது வெள்ளிவிழாவினை கொண்டாடியது. இப்பொன்னான நிகழ்வில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

அவர்கள் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மேலும், 2010–2011–ஆம் கல்வியாண்டு முதல், சீர்மிகு சட்டப்பள்ளியில் இளநிலை சட்டப்படிப்பு பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகை வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தின் நடப்புச் செலவினங்களை மேற்கொள்ள ஏதுவாக 2021–2022 மற்றும் 2022–2023–ஆம் நிதியாண்டிற்கான தொகுப்பு நல்கை நிதியாக ரூ.10.86 கோடி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப்பள்ளியில் செவியுணர் காணொளி ஊடக மையம் அமைத்திட ரூ.46.58 இலட்சத்திற்கு நிருவாக அனுமதியும் மற்றும் பெருங்குடி வளாகத்தில் சூரிய மின் சக்தி உற்பத்தி

நிலையம் நிறுவிட ரூ.1.67 கோடிக்கு நிருவாக அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

அனைத்து வகையிலும் ஒரு முன்னுதாரணமாகத் திகழும் இப்பல்கலைக்கழகம் அதன், சீர்மிகு சட்டப்பள்ளி மூலம் இதுவரை 102 ஆராய்ச்சி மாணவர்களுக்கு சட்ட முனைவர் பட்டத்தினை வழங்கியுள்ளது. தற்போது 60 மாணவர்கள் முழு நேர அடிப்படையிலும், 196 மாணவர்கள் பகுதிநேர அடிப்படையிலும் முனைவர் ஆராய்ச்சி படிப்பினை இப்பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மையில் இப்பல்கலைக்கழகம், முதன்முறையாக தமிழ்மொழியில் ஒரு சட்ட இதழை வெளியிட்டுள்ளது. மேலும், இப்பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சூழல் சட்டம், குற்றவியல் சட்டம் மற்றும் குற்றவியல் நீதி நிருவாகம், இணையவெளி சட்டம்

மற்றும் நீதி மற்றும் நூலகத் துறைகளின் சார்பாக சக–மதிப்பாய்வு செய்யப்பட்ட சட்ட இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், இப்பல்கலைக்கழகம் ஆராய்ச்சியை ஊக்குவிக்கவும், எழுதுதல் மற்றும் சட்ட வரைவு திறன்களில் கவனம் செலுத்தும் வகையில் இளம் வயதினரிடம் ஆராய்ச்சி அறிவைப் பரப்புவதற்காகவும் சட்ட இணையவழி இதழ் (e–Journal) ஒன்றை அண்மையில் வெளியிட்டுள்ளது.

பொதுமக்களுக்கு சட்ட அறிவினை ஊட்டுவதற்காக, மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்புடன் கூடிய சட்ட அறிவு செயல் முறை மையம் ஒன்று தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் இயங்கி வருகிறது. குற்றவியல் சட்டப்பாடம் பயிலும் மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சி மேற்கொள்ளும் மாணவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வண்ணம், தடயவியல் ஆய்வுக்கூடம் ஒன்று தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகம் கீழ்க்காணும் தேசிய மற்றும் சர்வதேச பல்கலைக் கழகங்களுடனும், நிறுவனங்களுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ஏற்படுத்தி, கல்வி, பயிற்சி, சட்டம், நீதி, சமூக முன்னேற்றம் மற்றும் அவற்றோடு தொடர்புடைய பாடங்களில் ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் ஆய்வு செய்வதன் மூலமாக தன்னுடைய செயல்பாடுகளை விரிவாக்கம் செய்கிறது.

(1) மகாராஷ்டிரா தேசிய சட்டப் பல்கலைக்கழகம், அவுரங்காபாத்;

(2) தி சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிட்டட், மும்பை;

(3) மகாராஷ்டிரா தேசிய சட்டப் பல்கலைக்கழகம், மும்பை;

(4) டாடா இன்ஸ்டிடியூட் ஆப் சோசியல் சயின்சஸ், மும்பை;

(5) ஏ.ஐ.ஆர் லாவா அகாடமி அண்ட் ரிசர்ச் சென்டர், நாக்பூர் (ஏ.எல்.ஏ.ஆர்.சி);

(6) டிரான்ஸ்கிரிப்ட்ஸ் சொல்யூசன்ஸ் பிரைவேட் லிமிட்டட், ஐஐடி மெட்ராஸ் ரிசர்ச் பார்க், தரமணி, சென்னை;

(7) கன்சோர்டியம் பார் எஜீகேசனல் கம்யூனிகேசன், புது டெல்லி;

(8) இன்ஸ்டிடியூட் ஆப் கம்பெனி செகரட்டரீஸ் ஆஃப் இந்தியா (ஐ.சி.எஸ்.ஐ);

(9) ஸ்போக்கன் டுடோரியல்ஸ், இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி, மும்பை;

(10) சைல்டு அண்டு அடோலசண்ட் ஃபவுண்டேசன் ஆஃப் இந்தியா (சிஏஎப்ஐ) மற்றும் இன்ஸ்டிடியூட் ஆப் சைல்டு டெவலப்மெண்ட் எஜீகேசன் ரிசர்ச் அண்டு டெக்னாலஜி (ஐசிடிஈஆர்ட்டி) ; மற்றும்

(11) குஜராத் தேசிய சட்டப் பல்கலைக்கழகம், காந்தி நகர், குஜராத்.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகம், பெருங்குடி வளாகத்தில் "ஆல்

இந்தியா ரிப்போர்ட்டர் லீகல் எஜீகேஷன் சப்போர்ட் சூட் ப்ராஜெக்ட்" தொடங்கப்பட்டுள்ளது. சட்ட மாணவர்களுக்கு சிறந்த சட்டக் கல்விப் பயிற்சியை அளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும், இப்பல்கலைக்கழகம் மற்றும் இப்பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்றுள்ள சட்டக்கல்லூரிகளின் ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர் தங்களது தொழில் தரத்தில் மேன்மை பெற, மாற்றுப் பூசல் தீர்வுமுறையை மேம்படுத்த, சட்டம் சார்ந்த பயிற்சியளித்தல் மற்றும் பிற திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் ஆகியன இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

அரசு சட்டக் கல்லூரிகள், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப்பள்ளி மற்றும் தனியார் சுயநிதி சட்டக்கல்லூரிகளின் அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கான மாணவர் சேர்க்கை நடைமுறைகள், கலந்தாய்வு உட்பட அனைத்தும் தமிழ்நாடு டாக்டர்

அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தால், இணைய வழியாக, http://www.tndalu.ac.in எனும் வலைதளம் மூலம் 2021–2022–ஆம் கல்வியாண்டு முதல் நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு தேசிய சட்டப்பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

தமிழ்நாட்டில், தேசிய அளவிலான மிகச் சிறந்த சட்டக்கல்வி வழங்கும் பொருட்டு, 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளி, மாநிலச் சட்டத்தின் மூலம், திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், நவலூர் குட்டப்பட்டு கிராமத்தில் 25 ஏக்கர் பரப்பளவில் ரூ.79.22 கோடி மதிப்பீட்டில் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ்நாடு தேசிய சட்டப்பள்ளி, 2018–ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசிய சட்டப்பல்கலைக்கழகம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகம் உலகளாவிய அளவில் ஏற்பட்டு வரும் சூழ்நிலை மாற்றத்திற்கேற்ப, சட்டம் பற்றிய

அறிவு மற்றும் கற்றல், சட்ட செயல்முறைகள், வாதிடுதல் (வக்காலத்து) மற்றும் நீதி நிருவாகத் திறன் ஆகியவற்றை பரப்புவதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட 138 இடங்களில் ஐந்தாண்டு பி.ஏ.,எல்.எல்.பி (ஹானர்ஸ்), ஐந்தாண்டு பி.காம்., எல்.எல்.பி (ஹானர்ஸ்) மற்றும் எல்.எல்.எம் ஆகிய படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. மாணவர் சேர்க்கையானது பொது சட்டப்படிப்பு சேர்க்கைத் தேர்வு (Common Law Admission Test – CLAT) மூலம் நடைபெறுகிறது.

2022–2023–ஆம் கல்வியாண்டில் மேற்சொன்ன சட்டப்படிப்புகளில் சேர்க்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு :–

வ. எண்.	**படிப்பு**	**சேர்க்கப்பட்ட மாணவர்களின்எண்ணிக்கை**	
(1)	பி.ஏ., எல்.எல்.பி (ஹானர்ஸ்)	தமிழ்நாட்டில் வசிக்கும் மாணவர்கள்	27
		அகில இந்திய ஒதுக்கீடு	30
		அயல்நாடு வாழ் இந்தியர்கள்	03
		மொத்தம்	60
2.	பி.காம்., எல்.எல்.பி (ஹானர்ஸ்)	தமிழ்நாட்டில் வசிக்கும் மாணவர்கள்	25
		அகில இந்திய ஒதுக்கீடு	30
		அயல்நாடு வாழ் இந்தியர்கள்	00
		மொத்தம்	55
3.	எல்.எல்.எம்	தமிழ்நாட்டில் வசிக்கும் மாணவர்கள்	6
		அகில இந்திய ஒதுக்கீடு	08
		அயல்நாடு வாழ் இந்தியர்கள்	00
		மொத்தம்	14
		மாணவர்களின் மொத்த எண்ணிக்கை	**129**

இதுவரையில் இப்பல்கலைக் கழகத்தில், தமிழ்நாட்டில் வசிக்கும் மாணவர்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடங்கள் மட்டுமே தமிழ்நாடு மாநில இடஒதுக்கீட்டு முறையைப் பின்பற்றி நிரப்பப்பட்டு வந்தன. தற்போது, 2022–2023–ஆம் கல்வியாண்டு முதல் "அகில இந்தியப் பிரிவு" மாணவர் சேர்க்கையிலும் தமிழ்நாடு மாநில இடஒதுக்கீட்டு முறையைப் (69%) பின்பற்றி இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50%, பட்டியலினத்தவருக்கு 18% மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு 1% இடங்களை ஒதுக்கி இளநிலை, முதுநிலை மற்றும் ஆராய்ச்சி படிப்புக்கான மாணவர் சேர்க்கையினை நடத்திட அரசு ஆணை வெளியிட்டுள்ளது. அவ்வாறே, மாணவர் சேர்க்கையும் நடைபெற்று வருகிறது.

2020–2021–ஆம் கல்வியாண்டில் திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு தேசிய சட்டப்பல்கலைக்கழகத்தில் இளநிலை சட்டப்படிப்பு பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த முதல் தலைமுறை

பட்டதாரி மாணவர்களுக்கு கல்விக் கட்டணச் சலுகையாக ரூ.27 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளியிலுள்ள தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில், இணைய சட்டங்கள் மற்றும் இணைய பாதுகாப்பு ஆகியவை தொடர்பான ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் பயிற்சி மையம் (Centre for Research, Development and Training in Cyber Laws and Cyber Security) மற்றும் வணிகம் மற்றும் மனித உரிமைகள் மையம் (Centre for Business and Human Rights) ஆகிய இரு புதிய சட்ட ஆராய்ச்சி மையங்கள் நிறுவுவதற்காக ரூ.20 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

இப்பல்கலைக்கழகத்தில் பின்வரும் 14 ஆராய்ச்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

வ. எண்	ஆராய்ச்சி மையங்களின் பெயர்கள்	தொடங்கப்பட்ட ஆண்டு
1.	சென்டர் ஃபார் காம்பெடிசன் லா (சிசிஎல்)	2017
2.	சென்டர் ஃபார் ரிசர்ச் அண்ட் ரைட்டிங் (சிஆர்டயிள்யூ)	2018
3.	சென்டர் ஃபார் லேபர் அண்ட் டெவலப்மென்ட் ஸ்டடீஸ் (சிஎல்டி)	2018
4.	லீகல் சென்டர் ஃபார் விமன்ஸ் வெல்ஃபேர்	2020
5.	லீகல் சென்டர் ஃபார் ஹிஸ்டரி ஆஃப் சௌத் இந்தியா	2020
6.	சென்டர் ஃபார் லா அண்ட் அக்ரிகல்சர்	2021
7.	சென்டர் ஃபார் ஸ்டடி அண்ட் அட்வகேஸி ஆஃப் ஹியூமன் ரைட்ஸ்	2021

8.	சென்டர் ஃபார் ஸ்டடீஸ் இன் விக்டிமாலஜி	2021
9.	சென்டர் ஃபார் ஸ்டடீஸ் இன் ஆக்சஸ் டு ஜஸ்டிஸ்	2021
10.	சென்டர் ஃபார் ஸ்டடீஸ் இன் ஆல்டர்நேட் டிஸ்பியூட் ரெசல்யூசன்	2021
11.	சென்டர் ஃபார் இன்வஸ்ட்மென்ட் லாஸ்	2021
12.	சென்டர் ஃபார் ஸ்டடீஸ் இன் என்விரான்மென்டல் அண்ட் நேசுரல் ரிசோர்ஸஸ் லா	2021
13.	சென்டர் ஃபார் பிஸினஸ் அண்ட் ஹியூமன் ரைட்ஸ்	2022
14.	சென்டர் ஃபார் ரிசர்ச், டெவலப்மென்ட் அண்ட் ட்ரைனிங் இன் சைபர் லாஸ் அண்ட் சைபர் செக்யூரிட்டி	2022

தமிழ்நாடு தேசிய சட்டப்பல்கலைக்கழகம், கீழ்க்காணும் பல்கலைக்கழகங்கள் மற்றும் தேசிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்துள்ளது :–

(1) தேசிய சட்டப் பல்கலைக்கழகம், புது டெல்லி;

(2) இந்திய பல்கலைக்கழக தேசிய சட்டப் பள்ளி, பெங்களூரு;

(3) இன்ஸ்டிடியூட் ஆஃப் கம்பெனி செகரட்டரீஸ் ஆஃப் இந்தியா, புது டெல்லி;

(4) இந்திய பன்னாட்டு மக்களாட்சி மற்றும் தேர்தல் மேலாண்மை அமைப்பு, புது டெல்லி;

(5) தேசிய தொழில் நுட்ப கழகம், திருச்சிராப்பள்ளி; மற்றும்

(6) வைகாடோ பல்கலைக்கழகம், நியூசிலாந்து.

மேலும், தமிழ்நாடு தேசிய சட்டப்பல்கலைக்கழகம் கீழ்க்காணும் கூட்டமைப்புகளில் உறுப்பினராக உள்ளது :–

(i) இந்திய பல்கலைக்கழக கூட்டமைப்பு, புது டெல்லி;

(ii) இந்திய சமூக அறிவியல் கழகம், அலகாபாத்;

(iii) சாஸ்திரி இந்தோ–கனடியன் அமைப்பு, புதுடெல்லி;

(iv) ஆசிய சட்ட அமைப்பு, சிங்கப்பூர்; மற்றும்

(v) நூலக மேம்பாட்டு இணைவமைவு (DELNET), புது டெல்லி.

மாநில சட்ட ஆணையம்

மாநில சட்ட ஆணையம், உச்சநீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி மாண்புமிகு நீதியரசர் திரு. சொக்கலிங்கம் நாகப்பன் அவர்கள் தலைமையில் 15.06.2017 அன்று மீள அமைக்கப்பட்டது. அவ்வாறு மீள அமைக்கப்பட்ட மாநில சட்ட ஆணையத்தின் பதவிக்காலம் அதன் தலைவர் பதவியேற்ற நாளிலிருந்து 3 ஆண்டுகள் ஆகும். மாநில சட்ட

ஆணையத்தின் தலைவர், 19.06.2017 அன்று பதவியேற்றார். மாநில சட்ட ஆணையத்தின் தலைவர் பதவிக்காலமானது 18.06.2020 அன்றுடன் நிறைவுற்ற நிலையில் அரசானது மேற்சொன்ன சட்ட ஆணையத்தின் பதவிக்காலத்தினை 19.06.2020–லிருந்து மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டித்துள்ளது.

ஆங்கிலேய ஆட்சியின் போது இயற்றப்பட்ட ஒவ்வொரு சட்டத்தையும் மற்றும் அதற்குப் பின்பு இயற்றப்பட்ட சட்டங்களையும் ஆய்வு செய்வதே மாநில சட்ட ஆணையத்தின் பணியாகும். மேலும், ஆய்வு செய்யப்பட்ட சட்டங்கள் இன்றைய சூழ்நிலைக்குப் பொருந்தத்தக்கனவாக உள்ளனவா அல்லது இல்லையா என்பது பற்றியும் ஆணையம் தனது கருத்தினை அளிக்கும். மேலும், அந்தச் சட்டங்களுக்கு இணங்கிய வகையில் மாற்றமைவுகளை அல்லது திருத்தங்களைச் செய்வதற்கான ஆலோசனைகளை அரசுக்கு வழங்கும்.

உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றத்தின் பல்வேறு முடிவுகளுடன் மேற்சொன்ன சட்டங்கள் உடன்பட்டிருக்கின்றனவா எனவும் சட்ட ஆணையம் ஆய்வு செய்து அந்தச் சட்டங்களில் செய்ய வேண்டிய மாற்றங்களைப் பற்றியும் அரசுக்கு அறிவுறுத்தும். மேலும்,–

(அ) தற்போதுள்ள சட்டங்களில் உள்ள குறைகளை நீக்குவதற்கு பொருந்தத்தக்க மாற்றமைவுகளை அல்லது திருத்தங்களைச் செய்வதற்கான ஆலோசனைகளை வழங்கும்;

(ஆ) பொருந்தத்தக்கதாகவுள்ள சமூக, பொருளாதார, சட்ட நடவடிக்கைகள் பற்றிய ஆலோசனைகளை வழங்கும்;

(இ) மாநிலங்களுக்கிடையேயான உறவுகள் மற்றும் மைய–மாநில உறவுகளுக்கான வழிவகைகள் பற்றிய ஆலோசனைகளை வழங்கும்;

(ஈ) நீதி நிருவாகச் சீர்திருத்தங்கள் அடிப்படையிலான சிறந்த மற்றும் உகந்த நடவடிக்கைகளுக்கான ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை வழங்கும்; மற்றும்

(உ) மாநிலச் சட்டங்களுக்கு மட்டுமல்லாமல் இந்த மாநிலத்திற்கு பொருந்தும் வகையில் உள்ள மையச் சட்டங்களுக்கும் மாற்றமைவுகளை அல்லது திருத்தங்களைச் செய்வதற்கான ஆலோசனையை வழங்கும்.

மேலும், 10.07.2017 அன்று நடைபெற்ற தலைமைச் செயலாளர்களின் தேசிய மாநாட்டில், சிறந்த நிர்வாகத்திற்கு, திட்டக் குழுவின் (NITI Aayog) பரிந்துரையின் அடிப்படையில் "தமிழ்நாட்டில் உள்ள சட்டங்களை செம்மைப்படுத்துதல்" என்ற பொருள் மாநிலச் சட்ட ஆணையத்திற்கு அனுப்பப்பட்டு, அதன் ஆலோசனைகளையும், பரிந்துரைகளையும் வழங்குமாறு 21.09.2017 நாளிட்ட கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளது.

அதற்கேற்ப, தற்போதைய ஆணையம் 1770 சட்டங்களின் மீது இதுவரை 56 அறிக்கைகளை (13–வது அறிக்கை முதல் 68–வது அறிக்கை வரை) அரசுக்கு அளித்துள்ளது. அந்த அறிக்கைகளில், ஆணையமானது,–

(i) 179 முதன்மைச் சட்டங்கள் மற்றும் 1568 திருத்தச் சட்டங்களை நீக்கறவு செய்யவும்;

(ii) 20 சட்டங்களுக்கு திருத்தங்கள் செய்யவும்; மற்றும்

(iii) 3 சட்டங்களுக்கு பதிலாக புதிய சட்டங்களை இயற்றவும் பரிந்துரை செய்துள்ளது.

மாநில சட்ட ஆணையத்தின் மேற்கூறிய பரிந்துரைகளின் அடிப்படையில்,

(i) 11 முதன்மை சட்டங்கள் மற்றும் 809 திருத்தச் சட்டங்களும் நீக்கறவு செய்யப்பட்டுள்ளன.

(ii) 1864 ஆம் ஆண்டு தமிழ்நாடு வருவாய் நிலுவை தொகைகள் வசூலித்தல் சட்டம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

(iii) 3 சட்டங்களுக்கு பதிலாக புதிய சட்டங்களை இயற்ற, அச்சட்டங்களுக்கு தொடர்புடைய துறைகளுக்கு சட்ட ஆணையத்தின் பரிந்துரை அனுப்பப்பட்டு, குறிப்பு

கோரப்பட்டுள்ளது. இது தொடர்பாக அத்துறைகளின் குறிப்பு பெறப்பட்டபின் மேல்நடவடிக்கை இத்துறையில் எடுக்கப்படும்.

மாநில (சட்ட) ஆட்சிமொழி ஆணையம்

தமிழ்நாடு மாநில (சட்ட) ஆட்சிமொழி ஆணையம், 29.08.2018 ஆம் நாளில் மீண்டும் உருவாக்கப்பட்டது. இவ்வாணையத்தின் தலைவராக ஓய்வு பெற்ற சென்னை உயர்நீதிமன்ற மாண்புமிகு நீதியரசர் திரு. பொன்.கலையரசன் அவர்கள் 24.12.2018 அன்று நியமனம் செய்யப்பட்டு 27.12.2018 அன்று பதவியேற்றார்.

மாநில (சட்ட) ஆட்சிமொழி ஆணையத்தின் பணிகளானது :–

(i) தமிழில் சட்ட சொற்களஞ்சியம் (Law lexicon) தயாரித்து அச்சிடுவது.

(ii) மாநிலச் சட்டங்கள், அவசரக் சட்டங்கள் மற்றும் அதன் கீழ் வகுக்கப்பட்ட

விதிகளைத் தமிழில் மொழிபெயர்த்தல்.

(iii) ஒன்றிய அரசின் சட்டங்கள், அவசரச் சட்டங்கள் மற்றும் விதிகள் மற்றும் அதன் கீழ் வகுக்கப்பட்ட அறிவிக்கைகளை தமிழில் மொழிபெயர்த்தல்; மற்றும்

(iv) மாநில அரசால் சட்ட ஆட்சிமொழி ஆணையத்திற்கு அவ்வப்போது அளிக்கப்படும் பிற பணிகளைச் செய்தல்.

இவ்வாணையமானது, இந்திய அரசமைப்பின் திருத்திய பதிப்பினை (ஜனவரி 31, 2021 வரை திருத்தம் செய்யப்பட்டது) அனைத்துத் திருத்தங்களும், கலைச்சொற்களும் சேர்க்கப்பட்டு இருமொழிப் பதிப்பாக வெளியிட்டுள்ளது. இந்திய அரசின், சட்டம் மற்றும் நீதி அமைச்சகம் இந்திய அரசமைப்பின் திருத்திய பதிப்பை இரு மொழிப்பதிப்பாக 3000 படிகள் நூலாக வெளியிட ஆகும் செலவினத் தொகையான ரூபாய் 48,34,682/–ஐ (நாற்பத்தெட்டு இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து அறுநூற்று எண்பத்து இரண்டு) தமிழக அரசிற்கு வழங்கியுள்ளது.

மேலும், 25 மையச் சட்டங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, இந்திய குடியரசுத்தலைவர் அவர்களின் ஒப்புதல் பெற்றதைத் தொடந்து, அரசிதழில் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனைத் தொடர்ந்து 6 மையச் சட்டங்கள் ஆணையத்தால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு இந்திய குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெற வேண்டி இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

மேலும், 28 மையச் சட்டங்கள், தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, இந்திய அரசின் ஒப்புதலைப் பெற்றதைத் தொடர்ந்து, இந்திய குடியரசுத்தலைவரின் ஒப்புதலை பெறும் பொருட்டு நீலநிறத்தாளில் அச்சிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், 6 மையச் சட்டங்கள் மொழிபெயர்க்கப்பட்டு, இவ்வாணையம் மற்றும் மாநில அரசின் ஒப்புதல் பெற்ற பின்பு இந்திய அரசின் பணிமக்குழுவின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன.

இந்தியத் தண்டனைச் சட்டத்தொகுப்பு, 1860ஐ நாளது தேதிவரையிலான அனைத்து திருத்தங்களையும் உள்ளடக்கி நூலாக வெளியிடும் பணியும் மற்றும் குற்றவியல் விசாரணைமுறைச் சட்டத்தொகுப்பு, 1973இன் திருத்திய பதிப்பு வெளியிடுவதற்கான மொழிபெயர்ப்பு பணியும் இவ்வாணையத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புதிய சட்டச் சொற்களஞ்சியம் (Law Lexicon) தயார் செய்யும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. ஆங்கில அகர வரிசை 'P' வரை 28,500–க்கும் மேற்பட்ட சொற்கள் சேகரிக்கப்பட்டு அவற்றை தொகுக்கும் பணி நடைபெற்று வருகிறது.

சான்றுறுதி அலுவலர்கள்

1952–ஆம் ஆண்டு சான்றுறுதி அலுவலர்கள் சட்டத்தின்படி (மையச்சட்டம் எண் 53/1952) மாற்று முறை ஆவணங்கள் தொடர்பான பரிவர்த்தனைகளை சான்றளிப்பதற்கும் மற்றும் சான்றுறுதி அலுவலரின்

ஏற்பளிக்கப்பட்ட செயல்களுக்காகவும் சான்றுறுதி அலுவலர்கள் அமர்த்தப்படுவர். 31.01.2023 அன்று உள்ளபடி மாநில அரசால் சான்றுறுதி அலுவலர்களாக அமர்த்தப்பட்டு இம்மாநிலத்தில் செயல்படுபவர்களின் மொத்த எண்ணிக்கை 2318 ஆகும்.

நீடித்த வளர்ச்சி இலக்குகள்

நீடித்த வளர்ச்சி என்பது எதிர்கால தலைமுறையினர் அவர்களது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான திறன்களை பாதிக்காத வண்ணம், நமது இன்றைய தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் வகையிலான வளர்ச்சியாகும். 17 இலக்குகளையும், 169 குறிக்கோள்களையும் கொண்டுள்ள நீடித்த வளர்ச்சி இலக்குகள் ஐக்கிய நாடுகள் சபையில் முன்மொழியப்பட்டு 193 உறுப்பு நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. சட்டக் கல்வி பயிலும் பின்தங்கிய பகுதியைச் சேர்ந்த மாணவர்களும்

போட்டிகள் நிறைந்த வழக்கறிஞர் தொழிலில் சிறந்து விளங்கவும், ஒன்றிய, மாநில அரசுகளால் நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வுகளில் பங்கு பெற்று வெற்றிபெற உதவும் விதமாகவும் தமிழ்நாடு மாநில திறன் மேம்பாட்டுக் கழகம் மூலம் அனைத்து அரசு சட்டக் கல்லூரி மாணவர்களுக்கும் ஆங்கில திறன் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சி, அனைவரையும் உள்ளடக்கிய சமவாய்ப்புள்ள சமத்துவமான தரமான கல்வியை உறுதிப்படுத்துதல் மற்றும் எல்லோருக்கும் வாழ்நாள் முழுவதுமான கல்வி கற்றலுக்கான வாய்ப்பை ஊக்குவித்தல் என்ற நீடித்த வளர்ச்சி இலக்கு எண் 4–இன் (தரமான கல்வி) செயலாக்கத்திற்கு உதவி செய்கிறது. இத்துறையின் கீழ் இயங்கி வரும் கல்வி நிறுவனங்களில் சட்டம் தொடர்பான கல்வியை வழங்குவதன் வாயிலாக இத்துறை நீடித்த வளர்ச்சி இலக்கு 16–இன் (அமைதி, நீதி மற்றும் வலுவான அரசு நிறுவனங்கள்) செயலாக்கத்திற்கு உதவி செய்கிறது.

தலைமைச் செயலகத்திலுள்ள அனைத்து துறைகளுக்கும் சட்ட ஆலோசனை வழங்கும் அமைப்பாக உள்ள இத்துறை, பிற துறைகள் அவற்றின் இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை உருவாக்கும் கொள்கைகளுக்கு சட்ட வடிவம் கொடுப்பதுடன் அவை அடிப்படை உரிமைகள் உள்ளிட்ட அரசமைப்பின் கூறுகளுக்கு இணங்கி உருவாக்கப்படுவதை உறுதிசெய்கிறது. மேலும், இத்துறை நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடையப்படுவதற்கு உறுதிசெய்வதில் பிறதுறைகளுக்கு சட்ட ஆலோசனை வழங்கி வருகிறது.

எஸ். ரகுபதி,
சட்டத்துறை அமைச்சர்.

•••••••

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.